1990 சனவரி, 27]

தேசிய பூங்கா அல்லது புலிகள் சரணாலயம் அமைத்தல்

*830 திரு. ஆச்சியூர் எம். மணி:

திரு. கே. ரவி அருணன் :

திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுககு விடையளிப்பாரா :

மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு, முண்டந்துறை சரணாலயங்களை இணைத்து தேசிய பூங்கா அல்லது புலிகள் சரணாலயம் அமைக்க திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் களக்காடு—முண்டந்துறை சரணாலயங்களை இணைத்து, ப்ராஜெக்ட் டைகர், புலிகள் காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆச்சியூர் எம். மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆமெனில் இதனால் பச்சையாறு திட்டம் பாதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சரணாலயத்திற்கு ஏறக் குறைய 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுள்ள வனத் துறை பகுதி இருக்கிறது. பச்சையாறு திட்டத்திற்காக ஏறத்தாழ 100 ஏக்கர் நிலங்கள் தான் வனத்துறையிலிருந்து தர வேண்டி யிருக்கும். அது தண்ணீர் தேங்கியிருக்கக்கூடிய இடம். இதைத் தருவதினால் அந்தப் புலிகள் காப்பகம் எந்தவிதத்திலும் பாதிக்கப் படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய பூங்கா திட்டம் செயல்படுத்தப் படுவதன் மூலம் மாஞ்சோலை மலைப்பகுதியிலுள்ள 5 ஆயிரத் திற்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், காரையாறு, சேர்வலாறு, காலனி குடியிருப்பு போன்ற பகுதிகளில் வசிக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களும் படிப்படி யாக வெளியேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இத் திட்டம் நிறைவேற்றப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் அஞ்சு கிறார்கள். அந்தப் பகுதி மக்களிடம் இருக்கிற பயத்தைப் போக்க இந்த அரசு அவர்களுக்கு என்ன உத்தரவாதம் தர இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

1990 சனவரி, 27]

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவையில் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே மேலும் தனியார் வசம் உள்ள எஸ்டேட்களை ஆர்ஜிதம் செய்வது மத்திய அரசின் திட்டம். அந்த சரணாலயம் மத்திய அரசு திட்டம். அங்குள்ள தனியார் தோட்டங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக மத்திய அரசு ஏற்கெனவே 80 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறது. ஆனால் மலைவாசி மக்களை, அங்கே குடியிருக்கக்கூடிய மக்களை எந்த வகையிலும் பாதிக்கக்கூடிய அளவிலே இந்த அரசு நடந்து கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, களக்காடு பகுதியில் புலி ஏற்கெனவே நகருக்கு வந்து மலையடிவாரத்தில் உள்ள கால் நடைகளை எல்லாம் அடித்துக் கொன்று கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட புலி சரணாலயம் சற்று ஓரமான இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று அந்த மக்கள் விரும்புகின்றார்கள். அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குரங்குகளையும் புலிகளையும் யானைகளையும் அதிக அளவிலே பாதுகாக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசினுடைய திட்டம். சில சமயங்களில் புலிகளோ, யானைகளோ, ஊருக்குள் வந்து சில நாசங்களை ஏற்படுத்துகின்றன. இதுதான் நிலை, சட்டத்தில் அல்லது நோக்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலொழிய இதற்குப் பரிகாரம் காண முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் புலிகள் சரணாலயம் அமைப்பதற்கு 10 ஆயிரம் ஹெக்டேர் நிலம் தேவைப் படுவதாகக் கூறி இருக்கிறார்கள். அங்கே வர இருக்கின்ற பச்சையாறு அணைத் திட்டத்தின் மூலமாக வாழ்வு இழந்து வேலை இழந்து கருகிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் 40 ஆண்டுக் காலமாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த 100 ஹெக்டேர் நிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து 'கிளியரன்ஸ்' பெற்று அணை கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பச்சையாறு திட்டத்தை விட கொடுமுடியாறு திட்டத்திலேதான் மேலும் அக்கறை உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மத்திய அரசு அனுமதியைப்பெற்று விட்டோம். ஆகவே விரைவிலே அதை பொதுப் பணித் துறை நிறைவேற்றுவதற்கான பணியை ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். அதேபோல பச்சையாறு திட்டத்திற்கும் மத்திய அரசை அணுகி அனுமதியைப் பெறுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை.

*4196 திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

திரு. எம். முத்தையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஃபர்ஸ்ட்', 'செகன்ட்', 'தேர்டு' என்று சொல்வது போல பெரிய விவசாயி, சின்ன விவசாயி, குறு விவசாயி, மிகக் குறு விவசாயி என்று சொல்கின்ற அளவுக்கு மலையில் இருக்கின்றவர்கள் மிகமிகச் சின்ன விவசாயி களாக அந்தப் பகுதி மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மிகமிக எளிமையானவர்கள். அவர்கள் நீர்வளம், நிலவளம் இல்லாதவர்கள், ஒரு கவிஞர் சொன்னார், காலுக்கு செருப்பு இல்லை, கால் வயிறு கஞ்சி இல்லை, குடிக்க கஞ்சி இல்லை, குடியிருக்க வீடு இல்லை, அந்தமாதிரி 41 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் இன்னும் அந்தமாதிரியான பக்குவத்தில் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மக்களுக்கு சந்தன மரங்களைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய கருணை யான அரசு யார் யாருக்கோ அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. நம் முடைய தலைவர் என்னுடைய கேள்விக்குக் கொஞ்சம் கருணை காட்டுவாரா என்று அறிய விரும்புகிறேன்.